2000 மே 11]

துறை அமைச்சர் அவர்களும், கருணையோடு அந்தக் கல்லூரிக்கு நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாக அறிவித்திருப்பதற்காக நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எவ்வளவு மதிப்பீட்டில் அந்தக் கட்டடம் கட்டப்படும்? ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டனவா? அந்தப் பணிகளை விரைவாக முடிக்க அரசு முயற்சிகள் மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிகமாக அந்தக் கல்லூரி இயங்கி வருகிற பள்ளி இருக்கிற இடத்திலேயிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் அதற்கான இடம் ஏற்கெனவே தெரிவு செய்யப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, கட்டடங்கள் கட்டுவதற்கு அரசின் சார்பில் 215.6 இலட்சங்களுக்கு—2 கோடி ரூபாய் 15 இலட்சம் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வரைபட அடிப்படையில் ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, அந்தக் கட்டடம் கட்டுவதற்கான ஒப்பந்தங்கள், கட்டட ஒப்பந்தங்களைப் பற்றி இறுதியாக முடிவு செய்கின்ற Tender Award Committee-யின் முன்னிலையில் முடிவு செய்வதற்காக அனுப்பப்பட்டுள்ளன. அந்தக் குழுவின் முடிவு தெரிவிக்கப்பட்டவுடன் அந்த ஒப்பந்ததாரர் மூலம் கட்டடப் பணிகள் தொடங்கி, நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 583, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

583—

நூலகத்திற்குக் கட்டடம்

***31711—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி நகரிலுள்ள பொது நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2000 மே 11

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஈரோடு மாவட்டம், பவானி நகரிலுள்ள கிளை நூலகம் தற்போது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இக்கிளை நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட காலிமனை எதுவும் இதுவரையில் பெறப்படவில்லை. காலிமனை பெற தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலம் கிடைக்கப்பெற்றதும் இக்கிளை நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது, இடம் கிடைக்கவில்லை என்ற கருத்தினைக் கூறினார்கள். 3 ஆண்டுகளுக்கு முன்பாகவே, பவானி நகராட்சியின் மத்தியப் பகுதியான தேவபுரத்தில் நூலகம் கட்டுவதற்காக, அங்கே இருக்கக்கூடிய 20 சென்ட் நிலத்தில் 10 சென்ட் நிலத்தை நூலகம் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்து கொடுத்திருக்கின்றோம். நூலகக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற தீர்மானம் நகராட்சியின் மூலமாக அனுப்பப்பட்டு, என்னைப் போன்றவர்கள் நூலகப் பொறுப்பாளரிடத்திலே, அதிகாரியிடத்திலே அணுகி விண்ணப்பம் கொடுத்தும்கூட, இன்னும் செயல்படாமல் இருக்கக்கூடிய சூழ்நிலையில், நிலம் கொடுக்கப்பட்டிருக்குமேயானால், இந்த நிதியாண்டிலே கட்டிக் கொடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவேளை அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில், நிலத்தை வழங்குவதற்காக இந்தத் துறைக்கு அனுப்ப வேண்டிய ரெக்கார்டு அல்லது பதிவை அனுப்பியிருக்க மாட்டார்கள். அதனால்தான், நிலம், காலிமனை பெறப்படவில்லை என்று தெரிவித்து இருக்கிறார்கள். அப்படி நிலம் கிடைக்குமேயானால், எவ்வளவு விரைவில் முன்னுரிமை கொடுத்து, கட்டடம் கட்ட முடியுமோ, அந்த அளவு எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 584, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.